


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் சந்தித்து, தங்களது தந்தை, பெரியார் பெருந்தொண்டர் காரைக்குடி இராம சுப்பையா அவர்களின் 118வது பிறந்தநாள் விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள். உடன் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பொருளாளர் செல்வின் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் சந்தித்து பேசினார்.



ஈரோடு மாவட்டம், சாவடி பாளையம் அருகே ரயில்வே பாலத்தில் தடுப்பு காங்கிரீட் சுவர் நேற்று இரவு இடிந்து விழுந்ததில் ஈரோடு கரூர் செல்லும் சாலையில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. அதனை அறிந்த அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பாலத்தினை ஆய்வு செய்தார். அதுபோது நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் ரயில்வே துறை சார்ந்த அதிகாரிகள் பலர் இருந்தனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுதிறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு மின்கலனால் இயக்கக் கூடிய நவீன சக்கர நாற்காலிகளை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரவணக்குமார் ஆகியோர் உள்ளனர்.


